**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.406/2015**

**நாள்.20.02.2026**

**வா.சா. 1- திரு.அந்தோணி**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசார ணை**

வாதி சாந்தம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த அனைத்து விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். வழக்குரை 1வது தபசில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. வழக்குரை 1வது தபசில் சொத்தின் உட்பிரிவு சர்வே எண் விவரங்கள் என்ன என்றால் தெரியாது. வாதி சாந்தம்மாள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் பாதைக்காக வழக்கு போட்டுள்ளார். வாதி சாந்தம்மாள் கேட்டுள்ள பாதை அமைந்துள்ள புல எண்.273/1B ல் உள்ள இடம் என்றால் தெரியாது. வாதி கிரையம் பெற்ற வழக்குரை 1வது தபசில் சொத்தின் கிழமேல் தென்வடல் அளவு என்ன என்றால் 3 செண்ட் வாங்கியுள்ளார் என்று தெரியும் அளவு தெரியாது. வாதி பாதை என கேட்டுள்ள வழக்குரை 2 வது தபசில் சொத்தின் கிழமேல் தென்வடல் அளவு என்ன என்றால் தெரியாது. வாதி பாதை என கேட்டுள்ள இடத்தின் புல எண் என்ன என்பதை பார்வையிட நீதிமன்றம் மூலமாக ஆணையர் நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தெரியாது. என் அம்மா கிரையம் வாங்கிய இடத்திற்கு அடுத்த தென்புறம் உள்ள இடம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் அம்மா கிரையம் வாங்கிய இடத்திற்கு அடுத்த மேல்பக்கம் 33 செண்ட் வேதமாணிக்கம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வேதமாணிக்கம் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை வீட்டு மனைகளாக மாற்றி விற்பனை செய்துவிட்டார்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.20 17:49:06 +0530

என்றால் சரிதான். வேதமாணிக்கம் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை வீட்டு மனைகளாக மாற்றி விற்பனை செய்த இடத்தில் இடத்தை வாங்கியவர்கள் வீடு கட்டி கிழக்கு பார்த்து வாசல் அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான். 1வது பிரதிவாதிக்கு 33 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 33 செண்டில் வடகடைசி 3 செண்டை என் அம்மாவிற்கு 1வது பிரதிவாதி எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். என் அம்மா வீடுகட்டி குடியிருப்பதற்கு முன்பாகவே 1ம் பிரதிவாதி வீடு கட்டி விட்டார் என்றால் சரியல்ல நாங்கள் தான் முதலில் வீடு கட்டினோம். 1ம் பிரதிவாதியின் 33 செண்டிற்கு அடுத்த மேல்பக்கம் பாதை உள்ளதா என்றால் வேதமாணிக்கம் அமைத்த பாதை உள்ளது அது அவருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி பாதையின் அளவு கிழமேல் 6 அடி தென்வடல் 202 அடி என்றால் நான் இதுவரை அளந்து பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி வீடு கட்டி எத்தனை வருடம் ஆகிறது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி வீடு கட்டியது மற்றும் இதர அமைப்புகள் ஏற்படுத்தி 20, 25 ஆண்டுகள் மேலாக இருக்கும் என்றால் தெரியாது. எனது தாயார் கிரையம் வாங்கிய இடத்திற்கு தனியாக வருவாய் துறையில் பட்டா உள்ளது என்றால் பத்திரம் மட்டும் தான் உள்ளது பட்டா கிடையாது. எனது தாயார் கிரையம் வாங்கிய இடத்திற்கு தனியாக வருவாய் துறையில் பட்டா வாங்க முயற்சித்தாரா என்றால் தெரியாது. 1வது பிரதிவாதி எனது தாயாருக்கு வடகடைசியில் விற்பனை செய்த 3 செண்டில் எனது தாயார் வீடு கட்டியும் மீதமுள்ள இடத்தில் 1வது பிரதிவாதி வீடு கட்டியும் அமைதியாக தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் 33 செண்டிற்கு மேல்பக்கம் உள்ள வேதமாணிக்கம் எங்களுக்கு என்ன உறவு முறை என்றால் மாமா. வேதமாணிக்கம் அவருக்கு பாத்தியப்பட்ட இடங்களை வீட்டு மனைகளாக விற்பனை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.20 17:49:12 +0530

செய்து கீழ்பக்கம் பாதை ஏற்படுத்திய பிறகு தான் என் தாயார் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என் தாயார் கிரையம் பெற்ற வா.சா.ஆ.1ன் சொத்து விவரத்தில் மேல்புறம் பாதை இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் பாதை இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது. என் தாயார் கிரையம் பெற்ற 3 செண்ட் இடத்திலும் வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் கட்டியுள்ள மேற்படி வீட்டின் வாசல் மேற்குநோக்கி உள்ளது என்றால் சரிதான். என் தாயார் கட்டியுள்ள மேற்படி வீட்டின் மேற்கில் பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி மேற்கில் உள்ள பாதை வழியாக வந்து மெயின்ரோட்டை அடையவேண்டும் என்றால் சரிதான். 1996 ம் ஆண்டே வேதமாணிக்கம் மற்றும் 1வது பிரதிவாதியின் இடம் மொத்தம் 66 செண்ட் 2 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டதில் 1ம் பிரதிவாதியின் இடத்திற்கு மேல்புறம் வேதமாணிக்கம் இடம் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டதில் வேதமாணிக்கம் இடம் மற்றும் 2 ம் தபசில் பாதை புல எண்.273/1B ல் உள்ளது என்றால் தெரியாது. எனக்கு உட்பிரிவு செய்யப்பட்ட இடங்களின் புல எண் விவரங்கள் மற்றும் வேதமாணிக்கம் இடம் மற்றும் 2 ம் தபசில் பாதை புல எண்.273/1B ல் உள்ளது என்ற விவரம் நன்கு தெரியும் நான் பொய்யாக தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் கிரையம் பெற்றபிறகு உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கில் உட்பிரிவு செய்யாதவாறு உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் வலியுறுத்துக்கட்டளை பரிகாரத்தை கேட்டும் நீதிமன்ற ஆணையரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.20 17:49:18 +0530

நியமித்தால் உண்மை விவரம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் என்பதால் நீதிமன்ற ஆணையரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் வீடுகட்ட முதலில் வேதமாணிக்கத்திடம் இடம் கேட்டார் என்றால் தெரியாது. என் தாயார் வீடுகட்ட முதலில் வேதமாணிக்கத்திடம் இடம் கேட்டார் வேதமாணிக்கம் அவரது இடங்களை விற்றுவிட்டதால் வேதமாணிக்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1ம் பிரதிவாதி 3 செண்ட் இடத்தை என் தாயாருக்கு விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. வேதமாணிக்கம் என் தாயார் கிரையம் பெறும்போதே வேதமாணிக்கத்திற்கு பாத்தியப்பட்ட பாதையை பயன்படுத்திக் கொள்ளலாம் என வேதமாணிக்கத்தின் சம்பதத்தின் பேரில்தான் 1ம் பிரதிவாதி 3 செண்ட் இடத்தை என் தாயாருக்கு விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. என் தாயார் கிரையம் பெற்ற 3 செண்ட் இடத்திற்கு அடுத்த தென்புறம் 3 செண்ட் இடத்தை முத்தையா என்பவர் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வேதமாணிக்கம் மேற்படி முத்தையாவிற்கு பாதையை பயன்படுத்திக் கொள்ள அனுமதி மறுத்துவிட்டார் என்றால் தெரியாது. முத்தையா வீடுகட்டவில்லை என்றால் சரிதான். மேற்படி முத்தையா தான் கிரையம் பெற்ற இடத்தை 2ம் பிரதிவாதியின் மனைவிற்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டவாறு எந்த ஆக்கிரமிப்புகளும் இல்லை என்றால் சரியல்ல பாதையில் வேலிக்கல் ஊன்றப்பட்டுள்ளது. நான் சொல்லக்கூடிய வேலிக்கல் ஊன்றப்பட்ட இடம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 30 செண்ட் இடத்திலா என்றால் நாங்கள் செல்லக்கூடிய பாதையில். நான் பாதை என சொல்லக்கூடிய இடம் யார் பெயரில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது அது

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.20 17:49:23 +0530

நாங்கள் செல்லக்கூடிய பாதை. என் தாயார் கிரையம் பெற்ற 3 செண்ட் இடத்திற்கு தென்புறம் 1ம் பிரதிவாதி இடம் எல்கையில் காட்டப்பட்டுள்ளது என்றால் 1வது பிரதிவாதியின் மனைவி வாங்கிய இடம் உள்ளது. 1வது பிரதிவாதியின் மனைவி 2வது பிரதிவாதி என்றால் சரிதான். என் தாயார் கிரையம் பெற்ற 3 செண்ட் இடத்திற்கு தெற்கில் 2வது பிரதிவாதியின் இடமும் அதற்கு தெற்கில் 1வது பிரதிவாதியின் இடமும் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் 2வது தபசில் சொத்து உபயவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என நான் சொல்வது உண்மையல்ல என்றால் நாங்கள் பாதையின் தான் உரிமை கேட்கிறோம். என் தாயார் உண்மை விவரங்களை மறைத்து பொய்யான விவரங்களுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் பொதுபாதைக்கான அளவு மற்றும் கிழமேல் தென்வடல் அளவு பொதுபாதை யாருக்கு பாத்தியப்பட்டது என்பது பற்றிய விவரங்கள் இல்லை என்றால் அதை நான் சொல்லமுடியாது. எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்து எந்த புல எண்ணில் உள்ளது என்பது தெரிந்தும் மோசடியாக 2ம் தபசில் சொத்து என 2ம் பிரதிவாதியின் இடத்தை உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல பாதையில் தான் உரிமை கேட்கிறோம். என் தாயார் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரி யல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**</u>

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.20 17:49:30 +0530